ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | **28.05.2019** |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2019 மாச்சு

### முக்கியபண்புகள்

- 2019இன் முதற்காலாண்டுப்பகுதியில், ஏற்றுமதி வருவாய்கள் 5.6 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்த வேளையில் இறக்குமதிச் செலவினம் 19.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை, 2018இன் முதற்காலாண்டில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2,982 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 1,661 மில்லியனுக்கு சுருக்கமடைந்தது.
- 2019 மாச்சில், வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2018 மாச்சின் ஐ.அ.டொலர் 871 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 592 மில்லியனுக்குக் குறுக்கமடைந்தது.
- 2019 மாச்சில் வர்த்தகப் பற்றாக்குறையின் கணிசமான குறைப்பிற்கு இறக்குமதிச் செலவினம் 12.6 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தமை காரணமாக அமைந்ததுடன் இதற்கு ஏற்றுமதி வருவாய்கள் 2.6 சதவீதத்தினால் அதிகரித்தமை (ஆண்டிற்கு ஆண்டு) மேலும் ஆதரவாக விளங்கியது.
- மாச்சில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 4.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் (ஆண்டிற்கு ஆண்டு) 2019இன் முதற் காலாண்டுப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2018இன் தொடர்பான காலப்பகுதியை விட 4.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன.
- 2019 மாச்சில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 571 மில்லியனாகக் காணப்பட்டன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2019இன் முதற் காலாண்டுப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 1,617 மில்லியனாகக் காணப்பட்டது.
- 2019 மாச்சில் ஐ.அ.டொலர் 2.4 பில்லியன் தொகை கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகளுடன் நிதியியல் கணக்கு மேலும் வலுவடைந்ததுடன் 2019 மாச்சில் கொழும்புப் பங்குச் சந்தையிலிருந்து சில தேறிய வெறிப்பாய்ச்சல்கள் காணப்பட்ட போதும் இம்மாத காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தைக்கு வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய உட்பாய்ச்சல்கள் காணப்பட்டன.
- வர்த்தகப் பற்றாக்குறையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பும் நிதியியல் கணக்கிற்கான குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சலும் ஒன்றுசேர்ந்தமையின் விளைவாக ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக இலங்கை ரூபா 2018 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2019 மாச்சு இறுதியில் 3.8 சதவீதத்தினால் உயர்வடைந்தது. உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை உடனடுத்து ரூபாவில் சிறிதளவு வீழ்ச்சி காணப்பட்ட போதும் 2019 மே 28ஆம் நாள் வரையான காலப்பகுதியில் 3.8 சதவீதம் கொண்ட உயர்வொன்று பதிவு செய்யப்பட்டது.
- 2019 மே 13ஆம் நாளன்று பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை, இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ், ஐந்தாவது மீளாய்வினை நிறைவு செய்ததுடன் சிஎஉ 118.5 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 164.1 மில்லியன்) கொண்ட ஆறாவது தொகுதியினைப் பகிர்ந்தளிப்பதற்கும் ஒப்புதலளித்தது. நிறைவேற்றுச் சபை,

ஒழுங்குகளை ஓராண்டிற்கு, 2020 யூன் வரை நீடிப்பதற்கும் ஒப்புதலை அளித்ததுடன் எஞ்சிய கடன் பகிர்ந்தளிப்புக்களும் மீள்தளப்படுத்தப்பட்டன.

- நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2019 மாச்சு இறுதியில் ஐ.அ.டொலர் 7.6 பில்லியனாக விளங்கியதுடன் அது 4.3 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகவும் காணப்பட்டது.

**அட்டவணை 1: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்(அ)**

| வகை | மாச்சு 2018 ஐ.அ.டொ. மில் | மாச்சு 2019 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன-மாச்சு 2018 ஐ.அ.டொ. மில் | சன-மாச்சு 2019 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 1,108 | 1,137 | 2.6 | 2,989 | 3,156 | 5.6 |
| இறக்குமதிகள் | 1,979 | 1,729 | -12.6 | 5,971 | 4,817 | -19.3 |
| வர்த்தக மீதி (தேறிய) | -871 | -592 | | -2,982 | -1,661 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் (ஆ) | 438 | 459 | 4.7 | 1,329 | 1,390 | 4.6 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 678 | 571 | -15.7 | 1,979 | 1,617 | -18.3 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (இ) | -36 | -5 | | 19 | -34 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 208 | 2,562 | | 791 | 3,076 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 93 | 71 | | 358 | 238 | |
| நீண்ட காலக் கடன்கள் | 116 | 91 | | 433 | 438 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | 2,400 | | - | 2,400 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை,

(அ) தற்காலிகமானது.

(ஆ) 2018 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது.


(இ) இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்றுவிகிதம்

- 2019 மாச்சில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2018 மாச்சுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்குக் குறுக்கமடைந்தமைக்கு உயர்ந்த ஏற்றுமதி வருவாய்கள் பதிவுசெய்யப்பட்டமையும் இறக்குமதிகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுமே காரணங்களாகும். இறக்குமதிகள் மீதான செலவினம் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தமைக்கு மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் பின்பற்றப்பட்ட கொள்கை வழிமுறைகளே காரணமாகும். ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2019இன் முதல் மூன்று மாத காலப்பகுதியில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்குச் சுருக்கமடைந்தது.


- இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க ஏற்றுமதி விலைகள் உயர்ந்த வீதத்தில் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக ஏற்றுமதி நியதிகளில் இறக்குமதிகளின் சார்புரீதியான விலைகளைப் பிரதிபலிக்கின்ற வர்த்தக மாற்று விகிதம் 2019 மாச்சில் 3.3 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) மோசமடைந்திருந்தது. அதேவேளை, ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2019இன் முதல் மூன்று மாத காலப்பகுதியில் வர்த்தக மாற்று விகிதம் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சிறிதளவினால் மோசமடைந்தது.

**வரைபடம் 1: மாதாந்த வணிகப்பொருள் வர்த்தகத்தின் செயலாற்றம் (2018– 2019)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: வர்த்தக மாற்று விகிதம் (2018– 2019)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி


## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

- 2019 மாச்சில் வணிகப்பொருள் ஏற்றுமதிகள் முன்னொரு போதுமில்லாத விதத்தில் மிக உயர்ந்த மாதாந்த வருவாயான ஐ.அ.டொலர் 1,137 மில்லியனைப் பதிவுசெய்து 2.6 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியைக் காட்டியமைக்கு 2018 மாச்சின் உயர்ந்த தளமே காரணமாக அமைந்தது. ஏற்றுமதிகளின் வளர்ச்சிக்கு கைத்தொழில் மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகளின் மேம்பட்ட செயலாற்றம் தூண்டுதலாக அமைந்த வேளையில் வேளாண்மை ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன.

- கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழ், 2019 மாச்சில் புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து முதற்தடவையாக ஐ.அ.டொலர் 500 மில்லியனை விஞ்சி, முன்னொரு போதுமில்லாத விதத்தில் மிக உயர்ந்த மாதாந்த வருவாய்களைப் பதிவுசெய்தது. இவ்வளர்ச்சிக்கு பாரம்பரியச் சந்தைகளான ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் அதேபோன்று பாரம்பரியமற்ற சந்தைகளான கனடா, அவுஸ்திரேலியா மற்றும் சீனா ஆகிய நாடுகளிலிருந்தான ஆடை ஏற்றுமதிகளுக்கான உயர்ந்த கேள்வியே முக்கிய காரணமாக அமைந்தது. 2019 மாச்சில் புடவை மற்றும் ஏனைய புடவைப்பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் அதிகரித்தன. கடந்த மூன்று மாத காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிற்கு மாறாக, 2019 மாச்சில் பெற்றோல் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு நீர்கல மற்றும் வானூர்தி எரிபொருள் இரண்டினதும் அளவிலும் விலைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பே வழிவகுத்தது. அடிப்படை உலோகங்கள் மற்றும் அதன் பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தமைக்கு இரும்பு மற்றும் உருக்குப்பொருட்கள் மற்றும் அலுமீனியப்பொருட்களே தூண்டுதலாக அமைந்தன. உணவு, குடிபானம் மற்றும் புகையிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தமைக்கு காய்கறிகள், பழவர்க்கங்கள் மற்றும் விதைத் தயாரிப்புக்கள் தவிர்ந்த மற்றைய அனைத்துத் துணை வகைகளினதும் மேம்பட்ட செயலாற்றமே காரணமாக அமைந்தது. அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகளும் இரசாயன உற்பத்திகளும் 2019 மாச்சில் கைத்தொழில் ஏற்றுமதிகள் அதிகரிப்பதற்குப் பங்களித்தன. எனினும், பொறிகள், எந்திரங்களின் துணைச் சாதனங்கள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், இறப்பர் உற்பத்திகள், தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள் மற்றும் போக்குவரத்துக் கருவிகள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தொடர்பான காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.


- 2019 மாச்சில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு தேயிலை, சிறுவேளாண்மை உற்பத்திகள், இயற்கை இறப்பர் மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை ஏற்றுமதிகளின் குறைந்த செயலாற்றமே காரணமாக அமைந்தது. 2019 மாச்சில், தேயிலை ஏற்றுமதிகளின் அளவுகள் அதிகரித்த போதும் தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு தாழ்ந்த சராசரி ஏற்றுமதி விலைகளே காரணமாகும். எனினும், தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மற்றும் உள்ளீடு அல்லாத உற்பத்திகள் இரண்டினதும் ஏற்றுமதிகளில் காணப்பட்ட அதிகரிப்பே காரணமாகும். இம்மாத காலப்பகுதியில், வாசனைத்திரவியங்கள், கடலுணவு மற்றும் காய்கறிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் இம்மாதகாலப்பகுதியில் சிறிதளவினால் உயர்வடைந்தன.
- மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 0.4 சதவீதத்திற்கு வகைகூறும் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் உயர்வடைந்தமைக்கு ரைட்டேனியம் தாதுக்களின் ஏற்றுமதிகளே தூண்டுதலாக அமைந்தது.
- 2019 மாச்சில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 10.6 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் ஏற்றுமதி அலகு பெறுமதிச் சுட்டெண் 7.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையானது ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும் என்பதனைச் சுட்டிக் காட்டுகிறது.

**வரைபடம் 3: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 4: ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | மாச்சு 2018 ஐ.அ.டொ. மில். | மாச்சு 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) | சன-மாச் 2018 ஐ.அ.டொ. மில். | சன-மாச் 2019 ஐ.அ.டொ .மில். | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **861.1** | **898.4** | **4.3** | **2,322.0** | **2,494.3** | **7.4** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 43.7 | 47.3 | 8.1 | 121.5 | 135.9 | 11.8 |
| விலங்குத்தீன் | 11.2 | 8.7 | (22.5) | 26.1 | 35.3 | 35.0 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 486.8 | 532.7 | 9.4 | 1,328.7 | 1,474.2 | 11.0 |
| இதில் ஆடைகள் | 455.8 | 494.8 | 8.5 | 1,246.6 | 1,373.3 | 10.2 |
| புடவைகள் | 21.6 | 28.1 | 30.4 | 58.2 | 74.4 | 27.8 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 9.5 | 9.8 | 3.9 | 23.9 | 26.5 | 11.3 |
| இறப்பர் உற்பத்திகள் | 85.8 | 82.6 | (3.7) | 225.2 | 233.0 | 3.5 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 38.7 | 32.1 | (17.0) | 89.3 | 83.3 | (6.6) |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 47.7 | 39.0 | (18.3) | 108.8 | 108.0 | (0.7) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 13.4 | 10.0 | (25.5) | 28.6 | 26.0 | (9.1) |
| பெற்றோலிய உற்பத்திகள் | 37.3 | 48.0 | 28.7 | 135.5 | 124.0 | (8.5) |
| இரசாயன உற்பத்திகள் | 15.9 | 16.4 | 3.2 | 41.0 | 44.5 | 8.4 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 13.9 | 12.6 | (8.9) | 37.3 | 40.1 | 7.5 |
| அச்சிடல் கைத்தொழில்பொருட்கள் | 2.2 | 4.2 | 92.0 | 4.9 | 11.1 | 128.2 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 13.9 | 9.6 | (31.3) | 41.7 | 33.2 | (20.3) |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 7.4 | 6.8 | (8.0) | 20.5 | 19.0 | (7.2) |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 13.2 | 17.8 | 35.6 | 36.4 | 47.2 | 29.5 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 3.6 | 2.4 | (34.2) | 7.7 | 7.1 | (7.7) |
| ஏனையவை | 26.5 | 28.3 | 6.9 | 68.7 | 72.3 | 5.3 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **242.8** | **232.3** | **(4.4)** | **653.1** | **647.7** | **(0.8)** |
| தேயிலை | 138.5 | 125.9 | (9.1) | 368.5 | 347.2 | (5.8) |
| இறப்பர் | 3.7 | 3.2 | (11.3) | 11.8 | 8.4 | (29.1) |
| தேங்காய் | 30.8 | 34.8 | 12.9 | 78.3 | 87.8 | 12.2 |
| வாசனைத்திரவியங்கள் | 23.6 | 24.2 | 2.6 | 78.2 | 80.6 | 3.0 |
| காய்கறிகள் | 2.9 | 3.0 | 1.5 | 6.4 | 8.1 | 26.5 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.6 | 3.5 | (2.6) | 8.9 | 7.5 | (16.6) |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 11.8 | 9.5 | (19.3) | 30.5 | 27.2 | (10.8) |
| கடலுணவு | 28.0 | 28.2 | 0.8 | 70.4 | 80.9 | 14.9 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **2.2** | **4.5** | **106.8** | **8.4** | **9.1** | **7.6** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.5** | **1.7** | **7.9** | **5.2** | **5.0** | **(3.7)** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,107.7** | **1,136.9** | **2.6** | **2,988.7** | **3,156.1** | **5.6** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்


- 2019 மாச்சில் வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 12.6 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 1,729 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்து, தொடர்ந்து ஐந்தாவது மாதமாக வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இக்குறைப்பிற்கு, குறிப்பிட்ட அத்தியாவசியமல்லாத இறக்குமதிகளை ஊக்கம் குன்றச்செய்வதற்காக மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளும் நாணயத்தின் குறிப்பிடத்தக்களவு தேய்வும் முக்கிய காரணங்களாக அமைந்தன. எனினும், வெளிநாட்டுத் துறையில் ஏற்பட்ட சாதகமான அபிவிருத்திகள் மற்றும் 2019 வரவு செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகள் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு அத்தகைய கொள்கை வழிமுறைகள் புறக்கீடு செய்யப்பட்டன. இடைநிலை மற்றும் நுகர்வுப்பொருட்கள் மீதான குறைந்த செலவினம் 2019 மாச்சின் வீழ்ச்சிக்குப் பங்களித்த வேளையில் முதலீட்டுப்பொருட்கள் மீதான செலவினம் அதிகரித்தது. எரிபொருள் நீங்கலான மொத்த இறக்குமதிகளும் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன.

- 2019 மாச்சில் இடைநிலைப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு 2018 ஏப்பிறலிலிருந்து தங்கத்தின் மீது சுங்கத் தீர்வை விதிக்கப்பட்டமையினைத் தொடர்ந்த தங்கத்தின் இறக்குமதிகள் தேக்க நிலையில் தொடர்ந்தும் காணப்பட்டமையே காரணமாகும். கோதுமை மற்றும் சோளம் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு கோதுமையின் குறைந்தளவு இறக்குமதிகளே காரணமாகும். பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள், உணவுத் தயாரிப்பக்கள், ஊர்திகள், பொறிகள் மற்றும் அதன் பாகங்களின் இறக்குமதிகளும் இடைநிலைப்பொருட்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பங்களித்தன. மாறாக, எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் 2019 மாச்சில் அதிகரித்தமைக்கு, சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி இறக்குமதிகளில் குறைப்புக்கள் பதிவுசெய்யப்பட்ட போதும், மசகெண்ணெய்யின் உயர்ந்த இறக்குமதி அளவும் விலைகளுமே காரணங்களாக அமைந்தன. மேலும், வளமாக்கி இறக்குமதிகள் மீதான செலவினம் 2019 மாச்சில் அதிகரித்தரமைக்கு 2018 மாச்சுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த இறக்குமதி அளவுகளே முக்கிய தூண்டுதலாக அமைந்தன. மேலும், புடவைகள் மற்றும் புடவைப்பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினத்திற்குத் துணி வகைகளும் இரும்பினையும் உருக்கினையும் முக்கியமாகக் கொண்ட அடிப்படை உலோகமும் சிமெந்து சூழைகளை முக்கியமாகக் கொண்ட கனிப்பொருள் உற்பத்திகளும் வழிவகுத்தன.

- உணவு மற்றும் குடிபானங்கள், உணவல்லா நுகர்வுப்பொருட்கள் ஆகிய இரண்டிலுமுள்ள பெரும்பாலான விடயங்களின் குறைந்த இறக்குமதிகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2019 மாச்சில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. 2019 மாச்சில் தனியாள் உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்து 2018 திசெம்பரிலிருந்து அவதானிக்கப்பட்ட ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைத் தொடர்ந்தது. எனினும், தனியாள் உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. நாணயக் கடிதத்திற்கெதிரான அளவு வைப்புத் தேவைப்பாடுகள் புறக்கீடு செய்யப்பட்டமை மற்றும் உந்து ஊர்திகளின் மீதான கலால் தீர்வைகள் மேல் நோக்கிச் திருத்தப்பட்டமை என்பனவற்றுடன் உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் மீதான கொள்கை வழிமுறைகள் மாற்றத்திற்குள்ளாகின. மேலும், சந்தையில் உள்நாட்டு அரிசி உற்பத்தி போதுமானளவில் கிடைக்கத்தக்கதாக இருந்தமையினால் அரிசி இறக்குமதி அளவு குறைவடைந்து அரிசியின் இறக்குமதி குறைவடைந்த வேளையில் சீனி மற்றும் இனிப்பு வகைகளின் இறக்குமதிகள் குறைவடைந்தமைக்கு அவற்றின் குறைந்த இறக்குமதி அளவுகளும் விலைகளும் காரணங்களாக அமைந்தன. மேலும், ஆடை மற்றும் அதன் துணைப்பொருட்கள், தொலைத்தொடர்பூட்டல் கருவிகள், வீட்டு உபயோகச் சாதனங்கள், வீட்டுப்பொருட்கள் மற்றும் தளபாட விடயங்கள் போன்ற பெரும்பாலான உணவல்லா நுகர்வுப்பொருட்கள் மீதான செலவினம் இம்மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. எனினும், பாற்பண்ணைப்பொருட்கள், ஒப்பனைப்பொருட்கள், குளியலறைப்பொருட்கள், அச்சிடப்பட்டபொருட்கள் மற்றும் எழுதுகருவிகள் போன்றவற்றின் இறக்குமதிகள் 2019 மாச்சில் அதிகரித்தன.


- 2019 மார்ச்சில் முதலீட்டுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமைக்கு கட்டட மூலப்பொருட்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் உயர்ந்த இறக்குமதிகள் தூண்டுதலாக அமைந்தன. சிமெந்து, இரும்பு மற்றும் உருக்குப்பொருட்களின் உயர்ந்த இறக்குமதிகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் கட்டட மூலப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தது. பொறிகள் மற்றும் கருவிகள் மீதான இறக்குமதிச் செலவினம் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தமைக்கு பாரந்தூக்கிகளின் இறக்குமதியே முக்கிய காரணமாகும். மாறாக, 2019 மார்ச்சில், போக்குவரத்துக் கருவிகள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் தாங்கிகள், நீர்த்தாங்கிகள் மற்றும் பேருந்துகளின் இறக்குமதி மீது உறப்பட்ட செலவினம் குறைவடைந்தமையே காரணமாகும்.
- 2019 மார்ச்சில் இறக்குமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் முறையே 8.9 சதவீதத்தினாலும் 4.1 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து, இம்மாத காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்டவற்றின் அளவு மற்றும் விலை இரண்டும் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்தமையின் காரணமாக இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமையினை எடுத்துக்காட்டின.

**வரைபடம் 5: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 6: இறக்குமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 3: வணிகப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம்(அ)**

| வகை | மார்ச் 2018 ஐ.அ.டொ. மில். | மார்ச் 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) | சன-மார்ச் 2018 ஐ.அ.டொ. மில். | சன-மார்ச் 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **477.1** | **351.9** | **(26.3)** | **1,360.4** | **912.3** | **(32.9)** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 177.3 | 138.0 | (22.1) | 526.3 | 334.9 | (36.4) |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 31.2 | 2.5 | (92.0) | 89.6 | 9.7 | (89.2) |
| இதில் அரிசி | 29.7 | 1.0 | (96.8) | 84.5 | 4.3 | (94.9) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பால் உற்பத்திகள் | 34.4 | 40.6 | 17.9 | 93.2 | 64.6 | (30.7) |
| காய்கறிகள் | 28.0 | 27.2 | (2.8) | 98.5 | 71.7 | (27.2) |
| கடலுணவு | 17.4 | 17.0 | (1.8) | 58.6 | 50.3 | (14.1) |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 29.4 | 20.0 | (32.0) | 88.1 | 48.9 | (44.5) |
| வாசனைத்திரவியங்கள் | 10.8 | 10.4 | (4.2) | 25.4 | 29.1 | 14.8 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 26.0 | 20.3 | (21.9) | 72.9 | 60.7 | (16.8) |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 299.9 | 213.8 | (28.7) | 834.2 | 577.4 | (30.8) |
| தனியாள் ஊர்திகள் | 150.0 | 72.2 | (51.9) | 358.8 | 169.8 | (52.7) |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 47.4 | 44.1 | (6.9) | 130.0 | 121.8 | (6.3) |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 21.0 | 20.5 | (2.5) | 68.3 | 50.2 | (26.5) |
| ஆடை மற்றும் துணைப் பொருட்கள் | 27.0 | 22.5 | (16.8) | 96.8 | 75.1 | (22.5) |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 24.4 | 22.8 | (6.5) | 73.0 | 61.6 | (15.6) |
| அச்சிடல் பொருட்கள் மற்றும் எழுதுகருவிகள் | 2.0 | 2.1 | 5.9 | 7.3 | 6.5 | (10.3) |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 28.0 | 29.7 | 5.9 | 100.0 | 92.4 | (7.6) |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **1,121.7** | **987.1** | **(12.0)** | **3,351.4** | **2,774.2** | **(17.2)** |
| எரிபொருள் | 398.0 | 407.9 | 2.5 | 1,075.2 | 1,018.6 | (5.3) |
| இதில் மசகெண்ணெய் | 49.9 | 101.9 | 104.0 | 153.4 | 237.7 | 55.0 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 304.2 | 271.5 | (10.8) | 797.0 | 659.0 | (17.3) |
| நிலக்கரி | 43.8 | 34.5 | (21.3) | 124.8 | 122.0 | (2.2) |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 150.3 | 14.7 | (90.2) | 375.1 | 47.7 | (87.3) |
| இதில் தங்கம் | 139.7 | 0.0 | (100.0) | 345.3 | 0.8 | (99.8) |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 198.6 | 213.9 | 7.7 | 691.1 | 688.6 | (0.4) |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 38.8 | 34.1 | (12.1) | 122.7 | 103.7 | (15.4) |
| ஊர்திகள் மற்றும் இயந்திரப் பகுதிகள் | 26.2 | 20.2 | (23.0) | 81.2 | 71.4 | (12.0) |
| கோதுமை மற்றும் சோளம் | 32.5 | 12.0 | (62.9) | 107.2 | 53.2 | (50.3) |
| அடிப்படை உலோகங்கள் | 27.9 | 34.6 | 23.9 | 135.4 | 140.8 | 3.9 |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 66.1 | 47.4 | (28.3) | 177.8 | 143.7 | (19.1) |
| தயாரிக்கப்பட்டாத புகையிலை | 7.2 | 3.8 | (46.8) | 16.2 | 12.2 | (25.1) |
| வளமாக்கி | 11.9 | 39.3 | 229.3 | 74.7 | 48.4 | (35.2) |
| உணவுத் தயாரிப்புக்கள் | 34.7 | 25.6 | (26.1) | 85.4 | 68.4 | (19.9) |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 129.5 | 133.5 | 3.1 | 409.5 | 377.6 | (7.8) |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **378.6** | **389.3** | **2.8** | **1,196.0** | **1,128.8** | **(5.6)** |
| பொறி மற்றும் கருவிகள் | 210.6 | 213.9 | 1.6 | 651.3 | 639.0 | (1.9) |
| கட்டடப் பொருட்கள் | 112.3 | 135.0 | 20.2 | 378.4 | 375.7 | (0.7) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 54.9 | 39.5 | (28.1) | 163.9 | 112.3 | (31.5) |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.8 | 1.0 | 25.6 | 2.4 | 1.8 | (25.8) |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **1.1** | **0.7** | **(30.4)** | **63.2** | **1.6** | **(97.5)** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,978.5** | **1,729.0** | **(12.6)** | **5,971.0** | **4,816.9** | **(19.3)** |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்


- 2019 மாச்சில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 244,328 ஆக விளங்கி 4.7 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தன. இவ்வளர்ச்சிக்கு இந்தியா, ஐக்கிய இராச்சியம், சீனா, ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்தான சுற்றுலாப்பயணிகளின் வருகைகள் தூண்டுதலாக அமைந்தன.

- 2019இன் முதற்காலண்டுப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 740,600 ஆக விளங்கி 2018இன் தொடர்பான காலப்பகுதியினை விட 4.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைக் காட்டின.

- 2019 மாச்சில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 459 மில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் 2019 இன் முதற்காலாண்டில் ஒன்றுசேர்ந்த வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,390 மில்லியனாகக் காணப்பட்டன.


- 2019 மாச்சில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 571 மில்லியனாகக் காணப்பட்டன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2019இன் முதல் மூன்று மாதகாலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 1,617 மில்லியனாகக் காணப்பட்டன.

**வரைபடம் 7: சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து நாடுகள் (மாச்சு)**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 8: சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை,
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்,
இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

- அரச பிணையங்கள் சந்தைக்கான வெளிநாட்டு முதலீடுகள் 2019 மாச்சில் ஐ.அ.டொலர் 41 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், அரச பிணையங்கள் சந்தைக்கான தேறிய உட்பாய்ச்சல்கள் ஆண்டின் முதற்காலாண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 53 மில்லியனாகக் காணப்பட்டன.


- கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கிய வெளிநாட்டு முதலீடுகள் 2019 மாச்சு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 5 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை 2019 முதல் காலாண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 34 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தன.

- 2019 மாச்சு மாத காலப்பகுதியில் அரசாங்கத்திற்கான நீண்ட காலக் கடன்கள் ஐ.அ.டொலர் 96 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாச்சலைப் பதிவு செய்தன.

## பன்னாட்டு ஒதுக்குகள்

- 2019 மாச்சு இறுதியிலுள்ளவாறு, நாட்டிற்கான பன்னாட்டு முறிகளுடன் சேர்த்து மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 7.6 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது 4.3 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டன. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2019 மாச்சு இறுதியில் ஐ.அ.டொலர் 10.5 பில்லியனாக விளங்கி 6.0 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டன.

**வரைபடம் 9: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் திரண்ட நிலுவை**





**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

- 2019 மே 28ஆம் திகதி வரையான இவ்வாண்டுப்பகுதியில், ஐ.அ.டொலருக்கு எதிராக இலங்கை ரூபா 3.8 சதவீதத்தினால் உயர்வடைந்தன. குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மற்றைய அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் ரூபா உயர்வடைந்தது.

**வரைபடம் 10: ஐ.அ.டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2018 | 2019 மே 28 வரை உயர்வு (+) / தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | -16.4% | +3.8% |
| யூரோ | -12.7% | +6.1% |
| பவுண் ஸ்ரேலிங் | -11.4% | +3.9% |
| யப்பானிய யென் | -18.1% | +2.9% |
| கனேடியன் டொலர் | -9.3% | +2.3% |
| அவுஸ்திரேலிய டொலர் | -7.6% | +5.7% |
| இந்தியன் ரூபா | -8.7% | +3.1% |

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி